# சிஹாட் மருத்துவ நிலையம்

## கேப்ரினி அவுட்ரீச் – ஷெப்பர்ட்டன், பிரைமரி கேர் கனெக்ட் - உடன் கூட்டமைப்பு

**கேப்ரின் அவுட்ரீச் ஒரு புதிய ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையத்தைத் திறந்துள்ளது. மருத்துவ நிலையம் வழங்கும் அனைத்துச் சுகாதாரப் பராமரிப்புகளும் இலவசம்.**

மருத்துவ நிலையம் அமைந்துள்ள இடம்
Primary Care Connect, 399 Wyndham Street, Shepparton.

### யார் கலந்து கொள்ளலாம்?

இந்த மருத்துவ நிலையம் புகலிடம் கோருவோர், ஆவணமற்ற புலம் பெயர்ந்தோர் (விசா கிடையாது), பாதுகாப்பற்றத் தற்காலிக விசா வைத்திருப்போர் மற்றும் வந்திறங்கி ஆறு மாதம் வரையிலான அகதியர் போன்றவர்களுக்கானது.

**மெடிகேர் இல்லாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

*செவிலியர் உங்கள் ஆரோக்கியத்தை மதிப்பீடு செய்து சில சிகிச்சைகளை வழங்கக்கூடும். மருத்துவர் உங்கள் சுகாதாரப் பிரச்சினைகளைக் கண்டறிந்து உங்களுக்கு மருந்து கொடுக்கக்கூடும். அத்துடன் வல்லுநர்களிடம் பரிந்துரை செய்யக்கூடும்.*

### அங்கு செல்வது பாதுகாப்பானதா?

மருத்துவ நிலையம் அனைவருக்கும் பாதுகாப்பானது. உங்களிடம் விசா இல்லையென்றாலும் இது பாதுகாப்பானது. மொழிபெயர்த்துரைப்பாளர்கள் தொலைபேசி மூலமோ அல்லது நேரிலோ கிடைப்பார்கள். அத்துடன் ஊழியர்கள் உங்கள் நிலைமையைப் புரிந்து கொள்வார்கள்.

இந்த மருத்துவ நிலையம் கோவிட் நோய்த் தொற்றிலிருந்து பாதுகாப்பானது. வந்திறங்கியவுடன் உங்கள் உடல் வெப்பநிலை சரிபார்க்கப்படும். மேலும் உங்களிடம் முகக்கவசம் இல்லையென்றால் உங்களுக்கு ஒன்று தரப்படும்.

Cabrini OUTREACH

PRIMARY CARE CONNECT





### சந்திப்பு ஏற்பாட்டை நான் எப்படிப் பெற முடியும்?

சந்திப்பு ஏற்பாட்டுக்குத் தயவு செய்து தொலைபேசியில் அழைக்கவும் Primary Care Connect: **03 5823 3200**

தேவைப்பட்டால் மருத்துவருடனான சந்திப்பு ஏற்பாடு செய்யக்கூடிய செவிலியரைக் காண நீங்கள் பதிவு செய்யப்படுவீர்கள். உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், கேட்கத் தயங்க வேண்டாம்.

விசாரணைகளை clinicsihat@cabrini.com.au என்ற முகவரிக்கும் மின்னஞ்சல் செய்யலாம்

**அவசரகால உதவிக்கு, எப்போதும் 000 என்ற எண்ணுக்கு அழைக்கவும் அல்லது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குச் செல்லவும்.**